[23rd January 1965

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஆசிரியர்களுக்கு முன்பிருந்த சம்பள விதிதங்கள் என்ன? இப்போது உயர்த்தப்பட்டிருக்கிற சம்பள விகிதங்கள் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN:

	Existing scale of pay. (1)	Revised scale of pay. (2)
	RS.	RS.
Lecturers previously known as Heads of section (Gazetted).	350—25—650	350—25—850
Workshop Superintendent (Gazetted).	350—25—650	350—25—850

பொற்கொல்லர்களுக்கு உதவி

* 85 கேள்வி.—திரு. மு. கருணாநிதி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

தமிழகத்தில், தங்கக்கட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்ட பொற் கொல்லர்களுக்கு மத்திய அரசு மானியமாகவும் கடனாகவும் அளித்த தொகை எவ்வளவு?

THE HON. SRI R. VENKATARAMAN: A loan of Rs. 1,37,52,800 (Rupees one crore, thirty-seven lakhs, fifty-two thousand and eight hundred only) and a grant of Rs. 15,000 (Rupees fifteen thousand only) have been received.

திரு. ஆ. கு. சுப்பையா: இந்தப் பொற்கொல்லர்கள் எவ்வளவு பேர்கள் கடன் கேட்டு விண்ணப்பம் செய்தார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: 31—12—1964 வரை கிடைத்தது 24,823. லோன் சாங்க்ஷன் செய்யப்பட்டது 12,371.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: தங்கக் கட்டுப்பாடு சட்டம் வந்த தற்குப் பிறகு கூட மறைமுகமாக தாராளமாக 21 காரட் தங்கம் மார்க்கெட்டில் கிடைக்கிறது. அதோடு மட்டுமல்ல, இந்தத் தங்கத்தைக் கொண்டு பொற்கொல்லர்களும் மற்றவர்களும் அவர வர்கள் வீட்டில் வைத்து 21 காரட்டில் நகை செய்கிறார்கள். 14 காரட்டில் நகை செய்து மார்க்கெட்டில் விற்பது அரிதாக இருக்கிறது. ஆகவே இந்தச் சட்டம் தோல்வி அடைந்திருக்கிறது. இதை ரத்து செய்து விடலாம் என்று நம் மாநில சர்க்கார், மத்திய சர்க்காருக்கு யோசனை கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் கட்சியைச் சார்ந்தவர்கள் டெல்லியில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். ஆகவே இங்கிருந்து ஒருவரும் சிபார்சு செய்ய வேண்டிய அவசியமில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கடன் கோரி வந்த மனுக்களில் சுமார் பாதி அளவிற்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது அப்படிக் கொடுக்கப்பட்டவர்களுக்கும் முதல் தவணைதான் கொடுக்கப் பட்டிருக்கிறது. மற்ற தவணைகள் கொடுக்கப்படவில்லையென்பதற்

23rd January 1965]

காக பொற்கொல்லர்கள் சமீபத்தில் உண்ணுவிருதம் இருந்த தகவல் அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதைப்பற்றி விசாரணை செய்தார்களா? அடுத்த தவணைகளைத் துரிதமாகப் பட்டுவாடா செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: 12,371 பேர்களுக்கு சாங்ஷன் செய்யப்பட்டது. 6,000 பேர்களுக்கு ரிஜக்ட் செய்யப்பட்டிருக்கிறது. பாக்கி 6,000 பேர்களுக்குப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். ரூபாய் 1,22,78,725 சாங்க்ஷன் செய்திருக்கிறோம். பட்டுவாடா செய்தது ரூபாய் 90,91,499. ஏதாவது ஒரு சிலருக்கு ஏதாவது காரணத்திற்காக இரண்டு மூன்று தவணைகள் கொடுக்கப்படாமல் இருக்கலாமே தவிர ஏராளமான பணம், 90 லட்சத்திற்கு மேல் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: எப்போதுமே என்ன செய்தாலும் அதிருப்திப்படுபவர்கள் இருக்கலாம். அவர்களைப் பொருட்படுத்த வேண்டாம். எந்த நோக்கத்திற்காகக் கடன் கோருகிறார்களோ அது துரிதமாகக் கிடைக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் கூறிய தகவலில் இருந்து 6,000-க்கு அதிகமான மனுக்கள் பரிசிலிக்கப்படாமல் இருக்கின்றன என்று இருக்கிறது. அஸிஸ்டென்ட் டயரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் அலுவலகங்களில் போதுமான ஸ்டாப் இல்லாதது இதற்குக் காரணமா? அப்படியானால் அதை நிவர்த்தி செய்ய யோசனை உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: "Staff" காரணம் இல்லை. மனுக்கள் போடுகிறவர்கள் பொதுவாகக் கொடுக்க வேண்டிய சர்டிபிகேட்ஸ் சரியாகக் கொடுப்பதில்லை. அவர்கள் என்ன வியாபாரம் செய்கிறார்கள் என்பதையெல்லாம் விளக்கி அதற்கு ஆதாரம் கொடுப்பதில்லை. அவையெல்லாம் திருப்பி யனுப்பப்பட்டு டீட்டேல்ஸ் எல்லாம் பூர்த்தி செய்யவேண்டும் என்பதற்காகப் பரிசீலனையில் இருக்கிறது. தகுதியற்றவர்கள் என்று ரிஜக்ட் செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் கொடுத்திருக்கிறேன்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: ஒரு கோடி அளவில் பெரும் தொகை கடனாகக் கொடுத்திருக்கிறோம். வாங்கிய கடன் வாங்கிய காரணத்திற்காக உபயோகிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பணம் கொடுத்த பிறகு அவர்கள் அந்தத் தொகையைச் செலவழித்து வியாபாரம் நடத்தி தவணைகளைத் திருப்பிக் கட்டிக் கொண்டிருந்தால் அதை ஏற்றுக் கொள்கிறோம். தவணைகள் கட்ட முடியாமல் போனால் அவர்கள் தொழில் நடத்தவில்லையா என்பதை விசாரணை செய்கிறோம்.

திரு. ஆ. கு. சுப்பையா: கடன் கோரி வந்த மனுக்களை இன்ஸ்பெக்டர் போய் பரிசீலனை செய்த பிறகு, ஜாயின்ட் இன்ஸ்பெக்டர் போய் பரிசீலனை செய்த பிறகு, ஜாயின்ட் டயரக்

டர் நேரடியாகப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள் திருச்சி, தஞ்சாவூர் இரண்டிற்கும் ஒரே ஜாயின்ட் டைரக்டராக இருப்பதினால் இந்த மனுக்களை சீக்கிரம் பைசல் செய்ய முடிவதில்லை. வருடக் கணக்கில் ஆகிறது. ஆகவே ஜில்லாவிற்கு ஒரு அஸிஸ்டென்ட் டைரக்டர் போட்டு மனுக்களைப் பரிசீலனை செய்ய நடவடிக்கைகள் எடுப்பார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அங்கத்தினர் அவர்கள் சொல்வது புள்ளிவிவரத்திற்கு மாறாக இருக்கிறது. ஒரு வருடத்திற்குள்ளாக 90 லட்சம் ரூபாய் வரையில் கடன் கொடுத்து இன்னும் 12,000 மனுக்கள் பரிசீலனை செய்து, அங்கீகாரம் செய்து, இவ்வளவு துரிதமாக வேலைகள் நடந்துகொண்டிருக்கும்போது துரிதமாக நடக்கவில்லை என்றால் அப்படிச் சொல்வதைச் சர்க்காரால் ஏற்றுக்கொள்ள முடியாது.

Neighbourhood schemes in Tiruchirappalli

* 86 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the present stage of the proposal to acquire lands for the neighbourhood schemes near Tiruchirappalli town; and

(*b*) when the scheme is expected to be completed?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Out of the total extent of 496·14 acres required for the Tiruchirappalli Neighbourhood Project, draft notifications under section 4 (1) of the Land Acquisition Act has been approved by Government in respect of 207·93 acres of lands. In respect of other lands the acquisition proposals are under various stages with the District Officials.

(*b*) Acquisition of lands is expected to be completed in about six to eight months in the normal course. Full development of the area will take a few years after the acquisition is completed.

கடற்கரை எஸ்டேட், சென்னை

*** 87 கேள்வி.—திரு. மு. கருணாநிதி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடற்கரை எஸ்டேட்டில் உள்ள வீடுகளுக்கான வாடகை எந்த அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது ?

(இ) அங்குள்ள வீடுகளின் வாடகைகளைக் குறைக்கும்படி மாநில வீட்டு வசதி போர்டாருக்கு அரசாங்கம் ஏதேனும் உத்திரவு பிறப்பித்துள்ளதா?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) A statement * is placed on the Table of the House.

---

* Printed as Appendix I on page 601.